# 17 முப்பொருள் விளக்கம்

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்காகும். இவற்றை மெய்கண்ட சாத்திரங்கள் என்றும் அழைப்பர். வேதங்களும் ஆகமங்களும் சைவ சித்தாந்தத்தின் பிரமாண நூல்களாகக் கொள்ளப்படுகின்றன. **வேதம்** பொதுப் பிரமாண நூல். **ஆகமம்** சிறப்புப் பிரமாண நூல். ஆகமத்தின் சாரமாக சைவ சித்தாந்தம் கொள்ளப்படுகிறது. காரணம், வேதம் - பசு. அதன் பால்-ஆகமம். அதிற் கடைந்தெடுத்த நெய் - சித்தாந்தம் என்று கொள்ளப்படுகிறது.

## (அ) பதி

எல்லா உயிர்களுக்கும் முதல்வனாய், எங்கும் பரந்தவனாய், எல்லாம் அறிந்தவனாய் உள்ளவன் எவனோ அவனே பதி. இப் பதியானவர் உலகைக் கடந்தவர். அதே சமயம் உலகுக்குள்ளும் உள்ளவர். அதாவது உலகுக்குள்ளும் உயிர்களுக்குள்ளும் வியாபித்து உள்ளவராவார். சைவ சித்தாந்தம் ஒரு கடவுட் கொள்கையுடைய மேலான தத்துவமாகும். இங்கே குறிப்பிடப்படும் இறைவன் (பதி) சிவன் எனக் கொள்ளப்படுகிறான். சிவ சம்பந்தத்தை உடையதான முடிந்த முடிவு என்பதனால் தான் சைவ சித்தாந்தம் என்ற பெயர் இத் தத்துவத்திற்கு ஏற்பட்டது.

உலக உயிர்கள் அனைத்திலும் மேலானவன். நித்தியப் பொருட்களில் முதன்மையானவன் என்று பதி போற்றப்படுகிறான். சைவ சித்தாந்தம் இரண்டு இயல்புகளைப் பதிக்கு உள்ளதாகக் கூறுகிறது. அவை தடத்த இலக்கணம் சொரூப இலக்கணம் எனும் இரு வகைப்படும்.

### 1. சொரூப இலக்கணம்

சொரூபம் நிர்க்குணம் எனப்படும். சைவ சித்தாந்தம் கூறும் இறை தத்துவத்தில் இறைவன் உருவம், குணம், குறி இல்லாததாய்; ஒன்றாய்; பலவாய்; என்றும் உள்ளதாய் எல்லைக்குள் அடங்காததாய்; சிறியதிற் சிறியதாய்; பெரியதிற் பெரியதாய் விளங்குவதே சொரூப இலக்கணம் ஆகும். இவ்வியல்புகளை யெல்லாம் உள்ளடக்கியுள்ள நிலையை 'ஏகன் அநேகன்' எனச் சிவபுராணமும் 'அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்' எனக் கந்தபுராணமுங் கூறுகின்றன.

**நிலவும் அருவுருவமின்றிக் குணங் குறிகளின்றி**
**நின்மலமாய் ஏகமாய் நித்தமாகி அலகிலுயிர்க் குணர்வாகி**
**அசலமாகி அகண்டிதமாயானந்த உருவாயன்றிச்**
**செலவரிதாய் செங்கதியாய் சிறிதாகிப் பெரிதாய்**
**திகழ்வது தற்சிவமென்பர்...**

என்று சிவப்பிரகாசம் குறிப்பிடுகிறது. இப்பாடலின் பொருள், இறைவனின் சொரூப இலக்கணத்தை முழுமையாக வெளிப்படுத்துகிறது. அதாவது பதியே அனைத்திலும் மேலானவன். அவனுக்கு அருவமும் இல்லை. உருவமும் இல்லை. அவன் அழுக்கற்றவன். அவன் ஒருவன். (ஏகன்). நித்தியமானவன் ஆனால் குணங்குறிகள் இல்லாதவன், சலனமற்றவன், எல்லையற்றவன். அதேநேரம் மாறானவர்கட்கு கிட்டுதற்கு அரியன். வழிபடுவோருக்கு எளியன். சிறியவற்றுள் சிறியவன், பெரியவற்றுள் பெரியவன். அவனே சிவன் என்கிறது இப்பாடல் அருவமும் உருவமுமாக உள்ள பதியின் இயல்பை,

**அருவும் உருவும் அறிஞர்க் கறிவாம்**
**உருவும் உடையான் உளன்.**

எனத் திருவருட்பயன் கூறுகிறது. இதே நேரம் கிட்டுவோர்க்கு எளியனாயும் எட்டுவோர்க்கு அரியனாகவும் உள்ள நிலையை,

**நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்**
**சலமிலன் பேர் சங்கரன்.**

என்று மேலும் ஒரு திருவருட்பயன் பாடலில் காணமுடிகிறது. இவ்விதம் யாரும் அறிய முடியாததாகிய பதியை ‘‘யாரும் அறிவரிதப் பொருள்’’ எனச் சிவப்பிரகாசம் குறிப்பிடுகிறது. அதாவது அறிவினால் அறிய முடியாததாயினும் இப்பொருளை அன்பினால் இலகுவில் எட்டலாம் என்பதே இவ் வரியின் பொருள்.

**‘‘அண்டம் கடந்த பொருள். அளவில்லதோர் ஆனந்த வெள்ளப் பொருள்’’** எனும் திருப்பல்லாண்டு வரி என்றுமுள்ள அறிவே வடிவான ஆனந்த மூர்த்தியாயிருப்பது இறைவனின் இயற்கையாகும் என்று வெளிக்காட்டுகிறது.

## 2. தடத்த இலக்கணம்

இறைவனுக்குரிய முதலாவது இயல்பு சொரூப இலக்கணம். இது குணம் குறிகளைக் கடந்தது. அதனை மேலே பார்த்தோம். அவனுக்குரிய அடுத்த இயல்பு தடத்த இலக்கணம். அது குணங்குறிகளோடு கூடிய நிலையாகும். இதை இப்போது பார்ப்போம். பூரணனாகிய சிவப்பரம்பொருள் தன்னியல்பான நிலையினின்றும் சாதாரண நிலைக்கு இறங்கி வந்து திருமேனி தாங்கும் நிலையே தடத்த இலக்கணம் எனப்படுகிறது. அதாவது ஆன்மாக்கள் மீது

கொண்ட கருணை மேலீட்டால் இறைவன் தன்னிலையினின்றும் கீழே இறங்கி வருதலே தடத்த இலக்கணம். தடத்தல் - சகுணம். இதனைச் சிவப்பிரகாசம்,

**நீங்கலரும் உயிர்க்குயிராய் நிற்றலானும்**
**நிறுத்திடுவன் நினைத்தவுரு நிமலன்தானே**

எனக் கூறுகிறது. அதாவது எல்லா உயிர்களிலும் ஒன்றி நிற்பவனாகிய இறைவன் உயிர்களை நற்பேறு பெறச் செய்தற் பொருட்டு தான் பல்வேறு உருவங்களை எடுக்கிறான். அநாதியே பாசபந்தத்தில் உழலும் ஆன்மாக்களை அப்பந்தத்தினின்றும் விடுவித்தற் பொருட்டு, ஐந்தொழில்களையும் செய்வதற்குரிய வகையில் தன் திருவருளையே திருமேனிகளாகக் கொண்டு அவற்றைச் செய்யும் போது உருவம், குணம், குறி, செயல்களையுடைய மூர்த்திகளாக இருப்பான்.

பரமசிவனின் மேலான கருணை பராசக்தி எனப்படும். அப் பராசக்தியினின்றும் இச்சாசக்தி, ஞானாசக்தி, கிரியாசக்தி என்பவை தோன்றும். பரமசிவன் அச்சக்திகளைப் பொருந்தி நின்று அருட்திருமேனிகளைக் கொண்டு சுத்த மாயையோடு பொருந்தி வேதாகமம் முதலிய கலைகளைத் தோற்றுவிப்பார். அசுத்த மாயையினின்றும் உலகைத் தோற்றுவிப்பார். உரிய காலம் வரை உலகை நிலைநிறுத்திக் காத்து அவற்றைத் தோன்றிய படியே ஒடுக்கிப் பின் தன்னில் ஒடுங்கச் செய்வான்.

**அருளினால் உருவு கொண்டு காரணன் அருளானாகில்**
**என்றும் கதிப்பவர் இல்லையாகும் துடைப்பவன்**
**உருவாய்த் தோன்றுவதன்றிப் படைக்கவரிதாம்**

என்றும், சிவப்பிரகாசம் கூறுவது நோக்கப்பட வேண்டியதாகும். உள்ளம் ஒருவழிப்பட்டு நன்நெறிக்குள் வராத ஆன்மா நன்நிலைக்கு வருவதற்கு பதி காட்டிய எளிய மார்க்கமே தடத்தநிலை ஆகும். இத் தடத்த நிலையில் இறைவன் எடுக்கும் வடிவங்கள் நிஷ்களம், நிஷ்களசகளம், சகளம் எனும் மூன்றுமாகும். இவற்றில் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன் ஆகிய நான்கும் சகளத் திருமேனிகள். இவற்றை உருவத் திருமேனிகள் என்றும் கொள்வர். சதாசிவன் (சிவலிங்கம்) - நிஷ்சைகளத் திருமேனி, அதாவது அருவுருவத்திருமேனி. சக்தியோடு கூடிய சிவம் (சிவம், சக்தி, நாதம், விந்து) - நிஷ்களசகளத் திருமேனி, அதாவது அருவத் திருமேனி.

குறையொன்றும் இல்லாத இறைவன் உயிர்களை உய்விக்கும் பெருங்கருணையினால் ஐந்தொழில்களைப் புரிகின்றான். அவற்றைச் செய்வதால் அவன் விகாரமடைவதில்லை. இறைவன் அகரம் என்னும் உயிர் அருவம், உருவம், அருவுருவம் முதன்மை கலந்திருத்தல் எனும் ஐந்து சிறப்புகளையும் கொண்டிருப்பதோடு சத்துப் பொருளாகவும் பூரணப் பொருளாகவும் ஞானப் பொருளாகவும் வியாபித்துள்ளான் எனத் திருவருட்பயன் பாடலால் அறியலாம். முழுமையும் நித்தியமுமான பதியை அன்பு செய்து அடைவதே அவனை அணுக இலகுவான வழியாகிறது.

## (ஆ) பசு

பதியைப் போலவே பசுவும் அநாதியானது; நித்தியமானது என்கிறது சைவசித்தாந்தம். பசுக்கள் அளவிறந்தன என்கிறது சிவப்பிரகாசம்.

**எண்ணரிதாய் நித்தமாய்......**
**உற்றிடும் நற்பசு வர்க்கம்**

என அது குறிப்பிடுகின்றது.

### 1. பசுவின் இயல்பு

பசு அநாதியே பாசத்தாற் கட்டுண்டது; ஆணவமாகிய இருளால் மறைக்கப்பட்டுள்ளது. ஆணவமுனைப்பால் நல்வினை தீவினைகளை ஆற்றுகிறது. தாம் புரிந்த இருவினைப் பயனை நுகரும் போது புதுவினைகளையும் பெருக்கி எண்ணிறந்த பிறவிகளைப் பெற்று உழலுகின்றன.

**“தொல்லை வினையாற் றுவண்டுழலும்**
**பல்லுயிர்..........”**

என்கிறது சிவப்பிரகாசம். பசுக்களின் ஆணவம் அவர்களை அநாதியே பற்றியது. இவை இந்திரியங்களாலும், பூதங்களாலும், அந்தக் கரணங்களாலும், சுத்த தத்துவங்களினாலும் பொருந்தி, அறிந்து அனுபவித்தற்குரியன. ஆயினும் இவை இவற்றால்தான் நிகழ்வன என்பதனை அறியமாட்டா இயல்பின. ஆன்மாக்கள் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்(நனவு,கனவு, உறக்கம்,பேருறக்கம்,உயிர்ப்படங்கள்) எனப்பட்ட ஐந்தவத்தைகளிலும் மிக்க ஆணவத்தால் மறைப்புண்டு அழுந்தி நிற்கும் தன்மையன.

மலங்களினால் பீடிக்கப் பெற்ற ஆன்மாக்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் எனப்படுவர். அவர்கள் முறையே ஒரு மலத்தார், இரு மலத்தார், மும் மலத்தார் எனப்படுவர்.

**மூன்று திறத்துள்ளாரும் மூல மலத்துள்ளார்கள்**
**தோன்றலர் தொத்(து) உளார்துணை**

என்பது திருவருட்பயன் பாடல். அதாவது மூவகை ஆன்மாக்களிலும் மூலமலமாகிய ஆணவம் விலகாது இருக்கும் எனக் கூறப்படுகிறது. மலங்களினால் பீடிக்கப்பட்ட ஆன்மாக்களை சித்தர், பக்தர், சாதாரண மனிதர் என்றும் குறிப்பிடுவர். அப்பிரிப்பு அவர்களைப் பற்றியுள்ள மலங்களின் எண்ணிக்கையால் வந்தது. அதாவது ஒருமலம், இருமலம், மும்மலம் என்ற எண்ணிக்கையாகும்.

ஆன்மாவைப் பசுத்துவம் உடைய ஆன்மா எனச் சிவஞானசித்தியார் கூறுகிறது. இந்த ஆன்மாவுக்குச் சுதந்திரமில்லை. ஐம்பொறிகளின் துணைக்கொண்டு உணர்த்த உணர்வதால் ஆன்மாவுக்குத் தானே அறியும் ஆற்றலும் இல்லை. குருடனுக்கு இருள், ஒளி, பொருள் என்பவற்றைப் பிரித்தறிய முடியாதது போல ஆன்மாவும் உணர்த்த உணருமேயன்றித் தானே அறியாததாகும்.

## 2. பதிக்கும் பசுவுக்குமான தொடர்பு

உயிர் இன்பதுன்பங்களை அனுபவிக்கும் போதே வினைகள் செய்து அவற்றால் பிறவியும், பிறவியால் வினையும் என மாறிமாறி அனுபவிக்கிறது. இதனால் பிறவிப் பெருங்கடல் பெருகிக் கொண்டே போகிறது. உயிரும் அநாதி, உயிருக்காகும் பிறவியும் அநாதியாகிறது. பெருகி வரும் வினைப்பயனை ஒரு பிறப்பில் தீர்க்க முடியாது. எனவே உயிர்கள் பல பிறவி எடுத்து அல்லலுறுகின்றன. அவற்றின் அல்லலைப்போக்கி இறைவன் திருவருளைச் செய்வான்.

**பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்.....**
**அல்லற் பிறவி அறுப்பானே.....**

என்று சிவபுராணம் கூறுகிறது. இவ்வாறு அல்லலுறும் உயிர்கள் இறை மீது அன்பு வழிபாடு கொள்வார்களேயாயின் அவன் கருணை கொண்டு நல்வழிப்படுத்துவான் என்கிறது சைவ சித்தாந்தம். தன்னோடு சேர்க்கும் தாடலை போற் கூடலை ஆக்கியளிப்பான்.

பதியினை வழிபட்டு ஆன்மாக்கள் நற்பேறு பெறும் போது முத்தி நிலையடைவர் என்கிறது சைவ சித்தாந்தம். இது கூறும் முத்திநிலை ''தாடலை போற் கூடல்'' என்பதாகும். இதனை,

**''தாடலை போற் கூடியவை தான் நிகழா வேற்றின்ப**
**கூடலை நீ ஏகமெனக் கொள்''**

என்கிறது திருவருட்பயன். தாடலை என்பது இரு பொருளாகவும் அதே நேரம் ஒரு பொருளாகவும் கொள்ளப்படும். அதாவது தாள் + தலை என்று இரு பொருளாகவும் தாடலை என ஒரு பொருளாகவும் கொள்ளப்படும். தாள்+ தலை = தாடலை என்பதில் தாள், தலை என இரு வேறு சொற்கள் தாடலை என ஒன்றாகச் சேர்ந்திருப்பது போல், இறைவனும் ஆன்மாவும் வேறு வேறாக இருப்பினும் முத்திநிலையில் இறைவனின் திருவடிகளைக் அடைந்த ஆன்மா பேரின்பத்தில் ஒன்றாகித் திளைக்கின்றது.

## (இ) பாசம்

ஆன்மாக்களைக் கட்டியுள்ளது பாசம். இதனை பந்தம், தளை, மலம் என்றும் அழைப்பர். இம்மலங்கள் மூன்றும் "ஏயு மும்மலங்கள்" எனச் சிவஞான சித்தியார் கூறுகிறது. இம் மூன்று மலங்களையும் ஆணவம், கன்மம், மாயை என்று பாகுபடுத்திக் கூறுவர். ஆன்மாக்கள் அடையும் துன்பங்களுக்கும் அவற்றின் குறைபாடுகளுக்கும் அவற்றை அநாதியே பீடித்து நிற்கும் மலங்கள் தான் காரணம் என்கிறது சைவ சித்தாந்தம்.

### 1. ஆணவம்

இது மூலமலம், சகசமலம், இருண்மலம் என்னும் பெயர்களால் அழைக்கப்படுகிறது. இம்மலம் செம்பிலே களிம்பு போலவும், நெல்லிலே உமி போலவும், ஆன்மாவோடு அநாதியே பிணைந்துள்ளது. இம்மலம் ஆன்மாவின் அறிவை அடக்கி மறையும் படி இருட்படலம் போல மறைத்து நிற்பதனால் இதனை இருண்மலம் என்றும் அழைப்பர். ஆணவமலம் இருளை விடக் கொடுமையானது. ஏனெனில் இருளானது உலகிலுள்ள பிற பொருட்களைக் காட்டமாட்டாதாயினும் தன்னுடைய உருவத்தைக் காட்டுந் தன்மையுடையது. ஆனால் ஆணவம் தன்னையுங் காட்டாது பிற பொருளையுங் காட்டாது.

**ஒரு பொருளுங் காட்டாது இருளுருவங்காட்டும்**
**இரு பொருளுங் காட்டாது இது**

என்பது திருவருட்பயன். "நெல்லின் முளை தவிடுமி போல் அநாதியாக நிறுத்திடுவர்" என்கிறது சிவப்பிரகாசம். எனவே அநாதியே உயிர்களைப் பற்றியுள்ள இம்மலமும் அநாதியானதே ஆகும்.

உயிர்களின் ஆணவத்தின் வலியை அடக்கும் இயல்பு திருவருளே ஆகும். எனவே அகிலத்தில் ஆணவம் வலிகெடச் செய்வதே திருவருள்.

**அருளிற் பெரியது அகிலத்து வேண்டும்**
**பொருளிற் தலையிலது போல்"**

என்கிறது திருவருட்பயன்.

## 2. கன்மம்

ஆணவத்தினால் கட்டுண்ட பசு அவற்றின் முனைப்பினால் செருக்குண்டு செயலாற்றுகிறது. இச்செய்கைகள் நல்வினை தீவினை எனப்படுகின்றன. இவ்விரு வினைகளே கன்மம் எனப்படுகின்றன. இந்த நல்வினை, தீவினை இரண்டும் சிவநல்வினை, பசுநல்வினை, சிவத்தீவினை, பசுத்தீவினை என நான்கு வகைப்படுகின்றன. இவ்வினைகள் சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என மூவகைப்படுகின்றன.

பல பிறவிகளிலும் செய்து பயன் இன்னும் அனுபவிக்கப்படாது சேர்ந்திருக்கும் வினைத்தொகுதிக்கு **சஞ்சிதம்** என்று பெயர். அத்தொகுதியிலிருந்து இப்பிறப்பில் நாம் அனுபவிப்பதற்கென எடுக்கப்படும் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு **பிராரத்துவம்** என்பது பெயர். பிராரத்துவத்தை நாம் அனுபவிக்கும் போது புதிதாக ஈட்டும் வினை **ஆகாமியம்** எனப்படும். இவற்றை முறையே பழவினை, நிகழ்வினை, எதிர்வினை என்றும் கூறலாம்.

காமிகம், நிஷ்காமிகம் என்னும் செயல்களிலே கன்மம் உருவாகிறது நிஷ்காமிக கன்மம் பயன்கருதாத செயலைக் குறிப்பதாகும். பயன்கருதாத செயலே தருமம். கன்மமானது சுயவிருப்பினை விலக்கி, கடமையைப் பெரிதென மதித்துச் செயற்படும் போது அது தருமமாகிறது. காமிக கர்மம் பயன் கருதிய செயலைக் குறிப்பது.

செயல்களால் வினைகளும் வினைகளால் பிறப்பும் உண்டாகிறது. இவற்றால் நற்பிறப்பு, தாழ்பிறப்பு என்பன உண்டாவதாகச் சிவப்பிரகாசம் கூறுகிறது. ஆன்மாக்களுக்கு வந்து கூடும் கன்மத்தின் வழி மூன்று பிரகாரமாயிருக்கும் என்கிறது அது. இச்சையின் காரியப்பாடே கன்மம். கன்மப்பிரவாகம் இருவினைகளாகிய இரட்டைகள். இருவினைக்குப் பயன் பிறவி.

எனவே ஊழ்வினைகளால் துயருறுவோர் பிறப்பு நிச்சயத்தாலும் நற்கருமங்கள் நற்செயல்களால் மேன்மையுறலாம் என இத்தத்துவம் விளக்குகிறது.

## 3. மாயை

மாயையை இறைவனின் பரிக்கிரகசக்தி என்பர். உடலும் உலகமும் எதிலிருந்து தோன்றுகிறதோ அதுவே மாயை. சைவ சித்தாந்தத்திலே சடவுலகுக்குக் காரணமான ஒரு சடப்பொருளே மாயை எனப்படுகிறது. இம்மாயை சுத்தமாயை, சுத்தாசுத்த மாயை, அசுத்த மாயை என மூவகைப்படும். இவை முறையே சிவதத்துவம், வித்தியாதத்துவம், ஆன்மதத்துவம் எனவுங் கூறப்படும். மேலும் சுத்தாசுத்த மாயை மிச்சிர மாயை எனவும் அசுத்த மாயை பிரகிருதி மாயை எனவுஞ் சொல்லப்படுகின்றன.

உயிர் நிலையாகியது உடம்பு. இவ்வுடம்பைப் போல் மாயாகாரியமாக உள்ளதே உலகம். இவ்வுடம்பு மூன்று தத்துவங்களைக் கொண்டது. அவை முறையே **சிவதத்துவம் - ஐந்து**, **வித்தியாதத்துவம் - ஏழு**, **ஆன்மதத்துவம் -24.** ஆக மொத்தம் 36 தத்துவம். இம்முப்பத்தாறும் 96 தத்துவமாக விரித்துக் கூறப்படுவதுமுண்டு.

**சிவதத்துவம் ஐந்து** - நாதம், விந்து, சதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை

**வித்தியாதத்துவம் ஏழு** - காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மூலப்பிரகிருதி.

**ஆன்மதத்துவம் - 24** - அந்தக்கரணங்கள் நான்கு, தன்மாத்திரை ஐந்து, ஐம்பொறிகள், கன்மேந்திரியங்கள் ஐந்து, பஞ்ச பூதங்கள்.

1. **அந்தக்கரணங்கள் நான்கு** – மனம், புத்தி, சித்தம், அகங்காரம்
2. **தன்மாத்திரைகள் ஐந்து** – சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
3. **ஐம்பொறிகள்**– மெய், வாய், கண், மூக்கு, செவி
4. **கன்மேந்திரியங்கள்ஐந்து** - வாக்கு, வாயு, பாணி, பாதம், உபத்தம்
5. **பஞ்சபூதங்கள்** – நிலம், நீர், வளி, வான், தீ

சிவதத்துவங்கள் ஆன்மாவின் மெய்யுணர்வு விளக்கத்திற்கு உபகாரமாய் நிற்பன. வித்தியாதத்துவங்கள் சமநிலையில் மெய்யுணர்வு பெற உதவுவன.

ஆணவம், கன்மம், மாயை, என்னும் மலங்களால் பிடிப்புற்று அழுந்தும் ஆன்மா அவற்றிலிருந்து விடுபடல் விடுதலை எனப்படுகிறது. ஆன்மாக்கள் ஞானம் பெறுதலே வீடுபேறு பெறுவதற்கு மார்க்கம் என்று சைவ சித்தாந்தம் குறிப்பிடுகிறது. நன்னெறியாகிய ஞானத்தை எய்தியக்கால் மோட்சத்தை எய்தலாம் எனச் சைவசித்தாந்தம் குறிப்பிடுகிறது. ஆன்மா சிவத்தோடு கூடி, தற்போதம் கெட்டு சிவானுபவத்தைப் பெறுதலே விடுதலை. அதாவது மலங்களிலிருந்து விடுபடுதல். இதற்கு நற்கருமங்கள் ஆற்றுதல் ஏற்புடையதாகிறது.

**மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. சைவ சித்தாந்தத்தின் பிரமாண நூல்கள் யாவை?
2. பதியின் தடத்த இலக்கணம் என்பது யாது?
3. சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள்களும் யாவை?
4. மும்மலங்களும் யாவை?
5. சைவ சித்தாந்தம் கூறும் மாயையின் மூன்று நிலைகளும் யாவை?

**செயற்பாடு**

01) சைவ சித்தாந்த நூல்களை அட்டவணைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

**பாடச்சுருக்கம்**

- சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள்கள் பதி, பசு, பாசம் ஆகும்.
- இவற்றில் மேலானது பதி.
- பசுவானது பாசத்தினால் கட்டுண்டது.
- அன்பு நெறியால் இறைவனை அடைவதன் மூலம் ஆன்மா விடுதலையை எய்தலாம்.